# திவ்யப்ரபந்த திருவாராதனம்

நம் அழகிய தமிழில் ஆழ்வார்களின் திருவாக்குக்களால் பெருமானுக்கு திருவாராதனம் செய்வோம் வாருங்கள்

தாஸன்
ரகுநாதன்

# நம் க்ருஹத்தில் ஸ்ரீமன் நாராயணன்

- தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
- தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர்
- தமர் உகந்து எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே
- அவ்வண்ணம் ஆழியானாம்

- பொய்கை ஆழ்வார்

# பெருமாள் ஸந்நிதியில் திருவிளக்கு ஏற்றுதல்

- அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
- இன்புருகு சிந்தை இடுதிரியா
- நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணர்க்கு
- ஞானத்தமிழ் புரிந்த நான்

- பூதத்தாழ்வார்

# த்வாரபாலகர்களின் அனுமதி வேண்டுதல்

- நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
- கோயில் காப்பானே கொடித்தோன்றும்
- தோரண வாயில்காப்பானே மணிக்கதவம் தாள் திறவாய்

- கோதைப்பிராட்டி

# பெருமானை நாம் அணுக நித்யஸூரிகளிடம் ப்ரார்த்தனை

- கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம் கொலையாழி கொடுந்தண்டு கொற்ற ஒள்வாள்
- காலார்ந்த கதிக்கருட னென்னும் வென்றிக் கடும்பறவை யிவையனைத்தும் புறஞ்சூழ் காப்ப
- சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த திருவரங்க தரவணையில் பள்ளி கொள்ளும்
- மாலோனைக் கண்டு இன்பக் கலவி யெய்தி வல்வினையேன் என்றுகொலோ வாழும் நாளே

- குலசேகராழ்வார்

# பரமபத நாதனை
# நாம் காண அழைத்தல்

- மையார்கருங்கண்ணி கமலமலர்மேல்
- செய்யாள் திருமார்பினில்சேர் திருமாலே
- வெய்யார் சுடராழி சுரி சங்கம் ஏந்தும்
- கையா உன்னைக்காணக் கருதுமென்கண்ணே.

- நம்மாழ்வார்

# திருப்பள்ளி எழுச்சி

- கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
- கனவிருளகன்றது காலையம்பொழுதாய்
- மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
- வானவரரசர்கள் வந்துவந்தீண்டி
- எதிர்திசை நிறைந்தனரிவரொடும் புகுந்த
- இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும்
- அதிர்தலிலலைகடல் போன்றுளதெங்கும்
- அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

  - தொண்டரடிப்பொடி ஆழ்வார்

# பெருமானும் பிராட்டியும் எழுந்து வீற்றி அருளவேணும்

- கிடந்தநாள் கிடந்தாயேத்தனை காலங்கிடத்தி உன்திருவுடம்பசைய
- தொடர்ந்து குற்றவேல் செய்து தொல்லடிமை வழி வரும் தொண்டரோர்கருளி
- தடங்கொள் தாமரைக் கண்விழித்து நீயேழுந்து உன் தாமரை மங்கையும் நீயும்
- இடங்கொள் மூவுலகுந் தொழவிருந் தருளாய் திருப்புளிங்குடிக் கிடந்தானே.

- நம்மாழ்வார்

## திருக்கண் விழித்து எங்களை கடாக்ஷித்து எங்கள் பாபங்களை போக்கியருள வேணும்

- கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
- செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
- திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
- அம்கண் இரண்டும்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
- எங்கள்மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்.

- கோதைப்பிராட்டி

# मंत्रासनम् – ஆஸனத்தில் எழுந்தருள வேணும்

- மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
- சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து வேரி
- மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
- மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
- போதருமா போலே நீ பூவைப்பூவண்ணா
- உன் கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
- சீரிய சிங்காசனத்து இருந்து யாம்வந்த
- காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்.

- கோதைப்பிராட்டி

# எழுந்து அமர்ந்த பெருமானை வணங்குதல்

- திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
- திகழும் அருக்கனணி நிறமும் கண்டேன்
- செருக்கிளரும் பொன்னாழி கண்டேன், புரி சங்கம் கைக்கண்டேன்
- என்னாழி வண்ணன்பால் இன்று

- பேயாழ்வார்

# அவன் திருவடி தொழுதல்

- உயர்வற வுயர்நலம் உடையவன் யவனவன்
- மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
- அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
- துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே.

- நம்மாழ்வார்

# பூத சுத்தி – அவனை நம்முள் இருத்தி நம்மை தூயோனாக ஆக்கிக்கொள்ளுதல்

- ஏக மூர்த்தி இருமூர்த்தி மூன்று மூர்த்தி பலமூர்த்தி
- ஆகி, ஐந்து பூதமாய் இரண்டு சுடராய் அருவாகி,
- நாகம் ஏறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே, உன்
- ஆகம் முற்றும் அகத்தடக்கி என் ஆவி அல்லல் மாய்த்ததே.

- நம்மாழ்வார்

# स्नानासनम् –
# பெருமானை நீராட அழைத்தல்

- வெண்ணெ யளைந்த குணுங்கும் விளையாடு புழுதியும் கொண்டு
- திண்ணென இவ்விரா உன்னைத் தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன்
- எண்ணெய்ப் புளிப்பழம் கொண்டு இங்குஎத்தனை போதும்இருந்தேன்
- நண்ணலரிய பிரானே நாரணா நீராட வாராய்

- பெரியாழ்வார்

# अलंकारासनम्

# பூச்சூட அழைத்தல்

- கருவுடை மேகங்கள் கண்டால்உன்னைக் கண்டாலொக்கும் கண்கள்
- உருவுடையாய் உலகேழும் உண்டாக வந்து பிறந்தாய்
- திருவுடையாள் மணவாளா திருவரங்கத்தே கிடந்தாய்
- மருவி மணம்கமழ் கின்ற மல்லிகைப் பூச்சூட்ட வாராய்.

- பெரியாழ்வார்

# பெருமாளுக்கு வஸ்த்ரம், சந்தனம், மாலை, திருவாபரணங்கள் ஸமர்ப்பித்தல்

- பூசும் சாந்தென் நெஞ்சமே புனையும் கண்ணி எனதுடைய,
- வாசகம்செய் மாலையே வான் பட்டாடையுமஃதே,
- தேசமான அணிகலனும் என் கை கூப்புச் செய்கையே,
- ஈசன் ஞாலமுண்டுமிழ்ந்த எந்தை ஏக மூர்த்திக்கே.

- நம்மாழ்வார்

# பெருமானின் திருமேனி அழகை அனுஸந்தித்தல்

- முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ,
- அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ,
- படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய், நின் பைம்பொன்
- கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே. கட்டுரையே.

- நம்மாழ்வார்

## தூப தீபங்கள் ஸமர்ப்பித்து மேலும் தொழத் தெரியவில்லையே என்று வருந்துதல்

- தொழுது மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு
- எழுதும் என்னுமிது மிகையாதலில்
- பழுதில் தொல் புகழ்ப் பாம்பணைப்பள்ளியாய்
- தழுவுமாறு அறியேன் உனதாள்களே.

- நம்மாழ்வார்

# பல்லாண்டு பாடுதல்

- அன்று இவ் உலகம் அளந்தாய் அடிபோற்றி
- சென்றங்குத் தென்இலங்கை செற்றாய் திறல்போற்றி
- பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
- கன்று குணில்ஆ வெறிந்தாய் கழல்போற்றி
- குன்று குடையாய் எடுத்தாய் குணம்போற்றி
- வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
- என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
- இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்.

- கோதைப்பிராட்டி

# ஸஹஸ்ர நாமனான நீயே எங்கள் தெய்வம் என வணங்குதல்

- ஓராயிரமாய் உலகேழளிக்கும்
- பேர் ஆயிரங்கொண்ட ஓர் பீடுடையன்
- காராயின காள நன்மேனியினன்
- நாராயணன் நங்கள் பிரான் அவனே

- நம்மாழ்வார்

# எனக்கு உன் தரிசனம் எப்போதும் கிடைக்கும்படி அருளவேணும் என ப்ரார்த்தித்தல்

- செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
- நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
- அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
- படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே

- குலசேகராழ்வார்

# நான் வேறு சிந்தனைகளில் இருந்தாலும் நான் உன்னையே நினைப்பதாத நீ நினைத்து அருள வேண்டும்

- இரந்துரைப்பதுண்டு வாழி ஏம நீர் நிறத்தமா
- வரம் தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில் மன்னு சீர்
- பரந்த சிந்தை யொன்றி நின்று நின்ன பாத பங்கயம்
- நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே

- திருமழிசை ஆழ்வார்

# भोज्यासनम्

# ப்ரஸாதங்கள் ஸமர்ப்பித்தல்

- அட்டுக் குவிசோற்றுப் பருப்பதமும் தயிர் வாவியும் நெய்யளறும் அடங்க
- கறவைகள் பின்சென்று கானம்சேர்ந்து உண்போம்
- அதன்பின்னே பாற்சோறு மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்.

- பெரியாழ்வாரும் கோதைப்பிராட்டியும்

# வெண்ணை ஸமர்ப்பித்தல்

- கொண்டல் வண்ணனைக்
- கோவலனாய் வெண்ணை உண்ட வாயன்
- என்னுள்ளம் கவர்ந்தானை
- அண்டர்கோன் அணியரங்கன்
- என் அமுதினைக் கண்ட கண்கள்
- மற்றொன்றினைக் காணாவே

- திருப்பாணாழ்வார்

# सपर्यासनम् –
# அடிமை செய்ய ப்ரார்த்தித்தல்

- ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி ,
- வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்,
- தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து,
- எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே

- நம்மாழ்வார்

# நம் தாழ்மையை விண்ணப்பித்தல்

- அடியேன் சிறிய ஞானத்தன், அறிதலார்க்கும் அரியானை
- கடிசேர் தண்ணந் துழாய்க்கண்ணி புனைந்தான் தன்னைக் கண்ணனை
- செடியார் ஆக்கை அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை
- அடியேன் காண்பான் அலற்றுவன், இதனில் மிக்கோர் அயர்வுண்டே?

- நம்மாழ்வார்

# நம் அனன்ய கதித்வத்தை விண்ணப்பித்தல்

- தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை
- விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே
- அரிசினத்தா லீன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
- அருள்நினைந்தே யழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே

- குலசேகராழ்வார்

# நம் பிரியா உறவை விண்ணப்பித்தல்

- அறிவுஒன்றும் இல்லாத ஆய்க்குலத்து உந்தன்னைப்
- பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம்உடையோம்
- குறைஒன்றும் இல்லாத கோவிந்தா உந்தன்னோடு
- உறவேல் நமக்குஇங்கு ஒழிக்க ஒழியாது அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உந்தன்னை
- சிறுபேர் அழைத்தனமும் சீறி அருளாதே
- இறைவா நீ தாராய் பறையேலோர் எம்பாவாய்.

- கோதைப்பிராட்டி

# அவனுக்கு பல்லாண்டு பாடுதல்

- பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
- பலகோடி நூறாயிரம்
- மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
- செவ்வடி செவ்விதிருக் காப்பு
- அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
- வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
- வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
- படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

- பெரியாழ்வார்

# உனக்கே ஆட்செய்வோம் என்று விண்ணப்பித்தல்

- சிற்றம் சிறுகாலே வந்துஉன்னை சேவித்துஉன்
- பொற்றா மரைஅடியே போற்றும் பொருள்கேளாய்
- பெற்றம்மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்துநீ
- குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
- இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
- எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
- உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
- மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்.

- கோதைப்பிராட்டி

# அவன் திருவருள் ப்ரார்த்தித்தல்

- வங்கக் கடல்கடைந்த மாதவனை கேசவனை
- திங்கள் திருமுகத்து சேய்இழையார் சென்றுஇறைஞ்சி
- அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
- பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான்
- கோதைசொன்ன சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
- இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைதோள்
- செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
- எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

- கோதைப்பிராட்டி

# பர்யங்காசனம் –

அவனுக்கு தாலாட்டு பாடி
சயனத்துக்கு எழுந்தருளப் பண்ணுதல்

- மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
- தென்னிலங்கை கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொஞ்சேர்
- கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
- என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ

- குலசேகராழ்வார்

# சயனித்து அருளிய அவனை நம் மனத்தே இருத்துதல்

- அரவத்து அமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் தானும்
- என் அகம்படி வந்து புகுந்து
- பரவைத் திரை பல மோத பள்ளிகொண்டாயே

- பெரியாழ்வார்

# திருவாராதன பலன் – நம் பாபங்கள் பறந்தோடினவே

- எம்மனா என் குலதெய்வமே என்னுடைய நாயகனே
- நின்னுளேனாய்ப் பெற்றநன்மை இவ்வுலகினில் ஆர்பெறுவார்
- நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம்
- சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே.

- பெரியாழ்வார்

# திருவாராதன பலன்

- குலம் தரும் செல்வம் தந்திடும், அடியார் படு துயர் ஆயின வெல்லாம்
- நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும், அருளொடு பெரு நிலம் அளிக்கும்
- வலம் தரும் மற்றும் தந்திடும், பெற்ற தாயினும் ஆயின செய்யும்
- நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

- திருமங்கை ஆழ்வார்